[11th September 1959

வேண்டியிருக்கும் என்று எண்ணி இதை முழுவதுமே தள்ளி வைத்துவிட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இந்த திட்டத்தை இரண்டாவது அல்லது மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே கணிசமான வேலை செய்ய இதைப் பல பிரிவுகளாக பிரித்து வேலை செய்வதற்காக ஏதாவது திட்டம் வகுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்காரிடத்தில் இதைப் பற்றி முடிவு செய்யும்போது இந்தக் கருத்தை தெரிவிக்கலாம்.

SRI P. U. SHANMUGAM : இந்தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே வேலை செய்து முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நம்பிக்கைதான் மனிதர்களுக்கு முக்கியம், அரசாங்கத்திற்கும் அப்படித்தான். அதல்லாமல் இதற்காக தனியாக உத்திரவாதம் அளிக்க முடியாது.

Handmade paper unit at Gandhigram

* 300 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா காந்தி கிராமத்திலுள்ள கையினால் காகிதம் தயாரிக்கப்படும் தொழிற்சாலையில் 1959-60-ல் எத்தனை பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படும் ?

(ஆ) இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க அரசாங்கத்தாரால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Eighteen candidates.

(*b*) Steps will be taken to absorb the candidates trained, in the five Hand-made Paper Units proposed to be started in this State during the current year.

SRI P. G. MANICKAM : ஸார், இவ்விதம் காகிதம் செய்வதில் பயிற்சி பெற்றவர்களுக்கு பிளாக்குகளில் வேலை கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது திட்டங்களை ஏற்படுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிளாக்குகளில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இது. இதில் பயிற்சி பெற்றவர்களை எல்லாம் இதில் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி திட்டமாக சொல்ல முடியாது. பேப்பர் யூனிட் தொழிலை நான்கைந்து இடங்களில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் இவர்களை நியமிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கலாம்.